Registered as a Newspaper

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை: ரூ. 1-25

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ளநண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஞூ வைகாசி மீ 22 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஷவ்வா பிறை 7 (05 — 06 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 163

### வள்ளத்தால் முடியாததை வானத்தால் சாதித்தனர்

# திடீரென வந்த இந்திய விமானங்கள்

# நிவாரண பொருள்களை தரை இறக்கின!

### நடவடிக்கை தொடரும் என்கிறார் லலித்

கொழும்பு, ஜூன் 5

யாழ் குடாநாட்டிலான ராணுவ நடவடிக்கை தொடரும்.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி சொன்னார்.

யாழ் குடாநாட்டில் பாதிப்புக்குள்ளான ஜனநாயகத்தை மலரச்செய்வதே ராணுவ நடவடிக்கைகளின் நோக்கம் என்றும் அமைச்சர் அத்துலத் முதலி தெரிவித்தார். (இ-எ)

## விமானம் இறக்கிய உதவிப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 5

நேற்று இந்திய விமானங்களில் இருந்து பரசூட்டுகள் மூலம் இறக்கப்பட்ட நிவாரணப் பொருள்களில் சில:-

- ★ பாண்
- ★ மண்எண்ணை
- ★ ஊசி மருந்துவகைகள்
- ★ பால்மா
- ★ மரக்கறி வகைகள் (வெண்டைக்காய், பூசணி, கெக்கரிக்காய் முதலியன)
- ★ தீப்பெட்டி
- ★ கடலை எண்ணெய்
- ★ அரிசி
- ★ துணிவகைகள்
- ★ பன்டேஜ்
- ★ ஊசிமருந்துகளை உட்செலுத்துவதற்கான ''சிரிஞ்'' வகைகள்.

இவை கடதாசிப் பெட்டிகளில் பொதி செய்யப்பட்டு இறக்கப்பட்டன. (உ)

## ராணுவ முகாம்களுக்கு மேல் பறந்து நோட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

பசியாலும், பிணியாலும் வாடும் யாழ்ப்பாண மக்களுக்கு இந்தியாவின் நிவாரணப் பொருள்கள் நேற்று மாலை நேரடியாகக் கிடைத்தன.

இந்திய விமானங்கள் குடாநாட்டின் பல பாகங்களிலும் பரசூட் மூலம் நிவாரணப் பொருள்கள் அடங்கிய பொதிகளைத் தரையிறக்கின.

ஸ்ரீலங்கா அரசின் அனுமதி எதுவுமின்றி குடாநாட்டின் ஆகாயப் பிராந்தியத்திற்குள் பிரவேசித்த ஐந்து போக்குவரத்து இந்திய விமானங்களும் ஆங்காங்கே மக்கள் வாழும் பகுதிகளில் இந்தப் பொதிகளைத் தரையிறக்கின. அவற்றைப் பொதுமக்கள் ஆர்வத்தோடு எடுத்தனர்.

இந்திய வள்ளங்களை ஸ்ரீலங்கா திருப்பி அனுப்பியதற்குப் பதிலடி கொடுக்குமுகமாகவே வானத்தால் வந்து இந்திய விமானங்கள் உணவுப் பொருள்களைக் குடாநாட்டில் இறக்கின.

இந்திய விமானப் படைக்குச் சொந்தமான ஐந்து போக்குவரத்து விமானங்கள் 25 தொன் உணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகளுடன் பெங்களூரில் இருந்து நேற்று மாலை நான்கு மணியளவில் புறப்பட்டன.

இந்த விமானங்கள் ஏ. என். 32 ரகத்தைச் சேர்ந்தவை.

இவ் விமானங்களுக்கு உதவியாக ரஷ்யத் தயாரிப்பான 'மிராஜ்-2000'

(2 ஆம் பக்கம் பார்க்க)

### பலாலியில் பதிலில்லை!

இலங்கை ஆகாய பிராந்தியத்தினுள் நுழைந்ததும் இந்திய விமானங்கள், பலாலியில் உள்ள விமானக் கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பு கொண்டன.

ஆனுல் கட்டுப்பாட்டு அறையில் இருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லை.

இப்படி இந்திய விமான அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக பி.பி.சி செய்தியாளர்மார்க் ரலி தெரிவித்தார். (உ-எ)



திமீர் தரை இறக்கம் இன்னும் பல திருப்பங்களுக்கு வழிகோலும் பாருங்கோ......!

### 35 நிமிட முன்னறிவித்தல்

நிவாரணப் பொருள்களை விமானங்கள் மூலம் தரையிறக்குவது பற்றி அந்நடவடிக்கை எடுப்பதற்கு 35 நிமிடங்களுக்கு முன்னரே இந்தியா இலங்கைக்கு தகவல் தெரிவித்ததாம். (உ)

## முடிவு எப்படி எடுக்கப்பட்டது?

புதுடில்லி, ஜூன் 5

நேற்றுக் காலை இந்திய வெளிவிவகார அமைச்சு ஆலோசனைக் குழு அவசரமாகக் கூடியது.

பிரதமர் ராஜீவ் காந்தி தலைமை வகித்தார்.

நிவாரணப் பொருள்களுடன் அனுப்பப்பட்ட இந்தியப் படகுகள் அணியை இலங்கைக் கடற்படை கச்சதீவில் வைத்து நேற்று முன்தினம் திருப்பி அனுப்பிய சம்பவம் குறித்தும்–

இலங்கையின் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஐ.நா பொதுச்சபைக்கு இலங்கை முறையிட்டது குறித்தும்– கூட்டத்தில் தீவிரமாக ஆராயப்பட்டது.

இறுதியில் இராணுவத்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரத்தை அப்பட்டமாக மீறியதாக ஸ்ரீலங்கா கண்டனம்

கொழும்பு, ஜூன் 5

ஸ்ரீலங்காவின் ஆகாயப் பிராந்தியத்தில் ஊடுருவல் நடத்தியதற்காக இலங்கை அரசு, இந்தியாவை வன்மையாகக் கண்டித்துள்ளது.

ஸ்ரீலங்காவின் கண்டன அறிக்கை நேற்று வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீதுவினுல் இந்தியத் தூதரிடம் கையளிக்கப்பட்டது.

இந்தியத் தூதர் டிக்ஸிற் இதற்காக வெளியுறவு அமைச்சுக்கு அழைக்கப்பட்டார்.

ஸ்ரீலங்காவின் இறைமை, ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தலாக இச் சம்பவம் அமைந்து இருப்பதாக கண்டன அறிக்கையில் ஸ்ரீலங்கா அரசு

(2 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய நிலைக்கு இலங்கை அரசின் பிடிவாதமே காரணம் - ராஜீவ்

புதுடில்லி, ஜூன் 5

இனப் பிரச்சினைக்குப் பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வு காண இன்று தடையாக இருப்பது, இராணுவத் தீர்வு காண வேண்டும் என்ற இலங்கை அரசின் பிடிவாதமே!

இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

கோவா மாநில அந்தஸ்து பெற்ற பின்னர் அங்கு முதன்முறையாக பிரதமர் காந்தி கடந்த புதன் விஜயம் செய்தார்.

அப்போது செய்தியாளர் மத்தியில் பேசுகையிலேயே பிரதமர் காந்தி இதனைத் தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கைகளினுல் பாதிக்கப்பட்டு உணவு, வைத்திய வசதிகள் மறுக்கப்பட்ட நிலையில் உள்ள இலங்கைத் தமிழர் நிலை குறித்து இந்தியா மிகவும் கவலை அடைகிறது.

அவர்களுக்கு உதவுமுகமாகவே நிவாரணப் பொருள்களுடன் படகுகளை அனுப்ப இந்திய அரசு தீர்மானித்தது. அது நியாயமான செயலே.

இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக இந்தியாவின் உறுதியான ஆதரவு

(2 ஆம் பக்கம் பார்க்க)

## உதவிப் பொருள்கள்; புலிகளே விநியோகம்

### பிரபா அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 5

பரசூட் மூலம் தரை இறக்கப்பட்ட நிவாரணப் பொருள்களை விடுதலைப் புலிகளே பொறுப்பேற்று மக்களுக்கு விநியோகிப்பர்.

–இப்படி விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே பொருள்களைக் கண்டெடுத்த மக்கள் அவற்றை அருகில் உள்ள விடுதலைப் புலிகளின் காரியாலயத்தில் ஒப்படைத்துப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிடைக்க ஒத்துழைக்குமாறு அவர் கோரியுள்ளார்.

நிவாரணப் பொருள்களை வழங்கியதற்காக அவர் இந்திய மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்தார். (உ)

### சுபநேரம்

05-06-1987

வெள்ளிக்கிழமை

சுபநேரம்:–
5.52 முதல் 7.22 வரை

ராகுகாலம்:–
10.22 முதல்11-52 வரை.

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

அட்டமி முற்பகல் 9-30 வரை பின்பு நவமி

## மனிதாபிமான உதவி ஈரோஸ் நன்றி

யாழ்ப்பாணம், ஜூன் 5

நாம் முன்னரே கேட்டபடி மனிதாபிமான உதவியை வழங்கியதற்கு இந்தியாவுக்கு நன்றி.

—இப்படி ஈரோஸ் இயக்கம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

அத்தியாவசியப் பொருள்களின்றி ஈழவர்கள் இன்னலுறும் இவ்வேளையில் நிவாரண உதவிகளைத் தகுந்த முறையில் வழங்கியதற்கு ஈழவர்கள் நன்றி தெரிவிக்கிறூர்கள்.—

இப்படி ஈரோஸ் தெரிவித்துள்ளது. (உ)

## பயந்து ஓடியவர்கள் வியந்து வரவேற்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 5

நிவாரணப் பொருள்களை இறக்குவதற்காக இந்திய விமானங்கள் குடாநாட்டின் மீது நேற்று மாலை வட்டமிட்ட போது அவற்றைக்கண்டுபயந்து விலகி ஓடிய மக்கள் பின்னர் வியந்து அதனைத் தேடி ஓடினர்.

விமானங்களைக் கண்டதும் அவை ஸ்ரீலங்கா அரசின் பொம்மர்கள் என எண்ணிப் பொது மக்கள் பதுங்கு குழிகளுக்குள் தஞ்சம் புகுந்தனர்.

பரசூட்டுகளில் உணவுப் பொருள்கள் இறங்கிய போது அவற்றில் அரசபடையினர் இறக்கப்படுவதாக மக்கள் நினைத்து மேலும் கிலி கொண்டனர்.

இதனுல் பரசூட்டுகள் தரையிறங்கிய இடங்களை அண்டிய பகுதிகளை விட்டு மக்கள் போட்டது போட்டபடி இருக்க

(2 ஆம் பக்கம் பார்க்க)

## துணிகரச் செயல் எம். ஜி. ஆர். பாராட்டு

புதுடில்லி, ஜூன் 5

விமான மூலம் யாழ் குடா நாட்டுக்கு நிவாரண உணவுப் பொருள்களை விநியோகித்த இந்தியப் பிரதமரின் நடவடிக்கை ஒரு துணிகர மனிதாபிமான நடவடிக்கை.

இப்படி தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் பாராட்டினூர்.

இந்திரா காங்கிரஸ் காரியக் கமிட்டியும் இதற்காக பிரதமரை பாராட்டியது.

நேற்றுக்காலை பிரதமர் காந்தி, எதிர்க்கட்சிகளின் தலைவர்களை அழைத்து, இலங்கைத் தமிழருக்கு எப்படி உதவுவது என்பது பற்றிய பிந்திய நிலைப்பாட்டை விவரித்தார். (உ-எ)

## பெங்களூருக்கு திடீரென திசை திரும்பிய செய்தியாளர் விமானம்

புதுடில்லி, ஜூன் 4

இராமேஸ்வரத்தில் இருந்து வெளிநாட்டு, உள்நாட்டுச் செய்தியாளர்கள், இந்திய செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் ஆகியோரை ஏற்றிச் சென்ற விமானம் பெங்களூருக்கு நேற்று பிற்பகல் திடீரென்று திசைதிருப்பப்பட்டது.

இந்தியப் படகுகள் அணியுடன் கச்சதீவு வரை சென்று விட்டு இவர்கள் நேற்று அதிகாலை

(2 ஆம் பக்கம் பார்க்க)

### 5 மாதங்களுக்கு உண்டு என்கிறார் அத்துலத்; ஆனால்

# அரசின் உணவுப் பொருள்கள் அரை மாதத்துக்கும் போதாது

### உயர் அதிகாரி உதயனுக்கு ஊர்ஜிதம்

— அலுவலகச் செய்தியாளர்: சண் ஜோண்சன் —

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ் குடாநாட்டின் உணவுத் தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு ஸ்ரீலங்கா அரசின் உணவுப் பொருள்கள் இங்கு இல்லை.

இதனை யாழ் செயலக உயர் அதிகாரி ஒருவர் உதயன் செய்தியாளரிடம் ஊர்ஜிதம் செய்தார்.

சாதாரண நிலைமையில் குடாநாட்டில் உள்ள மக்களுக்கு மாதமொன்றுக்கு இரண்டாயிரம் மெற்றிக் தொன்

சிறப்புச் செய்தி

அரிசியும் 2500 மெற்றிக் தொன் மாவும் தேவைப் படுகின்றன.

ஆனுல் குடாநாட்டுக்கென காங்கேசன்துறையில் இருக்கும் ஸ்ரீலங்கா அரசுக்குச் சொந்தமான ஒரேயொரு உணவுக் களஞ்சியத்தில் கடந்த மாதம் 24 ஆம் திகதி கணக்கெடுக்கப்பட்ட போது 1320 மெற்றிக் தொன் மாவும், 4,100 தொன் அரிசியும் மட்டுமே கையிருப்பில் இருந்தன.

ஆனுல் அதன் பின்பு உணவுக் கப்பல் எதுவுமே யாழ் குடாநாட்டிற்கு வரவில்லை.

குடாநாட்டில் 13 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள 21 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கடந்த மாதம் 24 ஆம் திகதிக்கு பின்பு எந்தவித உணவுப் பொருள்களும் வழங்கப்படவில்லை.

### ப.நோ.கூ. சங்கம்

இதனுல் சகல பலநோக்கு கூட்டுறவுச் சங்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா வெறுமனே பார்த்துக்கொண்டிராது

புதுடில்லி, ஜூன் 5

இலங்கைத் தமிழர் படும் இன்னல்கள் குறித்து இந்தியா இனிவெறுமனே பார்த்துக்கொண்டிராது.

இலங்கைக்கு இந்தியா இப்படி எச்சரிக்கைவிடுத்திருக்கின்றது.

உணவுப் பொருள்களுடன் யாழ் நோக்கிச் சென்ற இந்தியப் படகுகள் அணி இலங்கைக் கடற்படையினரால் கச்சதீவுக்கு அருகில் தடுத்து நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து புதுடில்லியில் பத்திரிகையாளர்கள் மாநாடு ஒன்றை வெளிநாட்டு அமைச்சு புதன் இரவு நடத்தியது.

அப்போது விடுத்த அறிக்கையிலேயே முன்கண்ட எச்சரிக்கையை இந்திய அரசு விடுத்தது.

இலங்கைஅரசின் இராணுவத் தாக்குதலுக்குள்ளாகித்துன்பப்படும்யாழ் தமிழருக்கு உதவுமுகமாகவே இந்திய அரசு நிவாரண உதவிகளை அனுப்பத் தீர்மானித்தது.

உதவிகளை ஏற்றிச் சென்ற படகுகள் அணி இலங்கைக் கடற்படையின் மிரட்டலுக்குப்பணிந்து இராமேஸ்வரத்துக்குத் திரும்பவேண்டியதாயிற்று. இதைத் தவிர வேறு வழியில்லை.

படகுகள் அணியை யாழ் செல்ல அனுமதிக்காத இலங்கையின் செயலை இந்தியா வன்மையாகக் கண்டிக்கிறது.

இலங்கையின் இச் செயல் குறித்து இந்தியா தனது ஆழ்ந்த கவலை

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் காந்தியின் புதிய நிலைப்பாடு

லண்டன், ஜூன் 5

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கடுமையான புதிய நிலைப்பாடு ஒன்றை எடுத்திருக்கிறூர்.

—இப்படி பி.பி.சியின் செய்தியாளர் மார்க் ரலி பெங்களூரில் இருந்து அறிவித்தார்.

வழமைபோல் இம்முறை தமிழ்நாட்டில் வீதி ஆர்ப்பாட்டங்களோ, கண்டனக் கூட்டங்களோ நடைபெறவில்லை.

ஆதலால் தமிழ் நாட்டு மக்களின் நெருக்குதலால்

(2 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

**உதயன்**
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## வெற்றி யாருக்கு?

யாழ்ப்பாணக் குடா நாட்டு மக்களுக்குப் பெரியதோர் ஏமாற்றம். தம் பசி தீர்க்க, பிணி தீர்க்க இந்தியா வழங்கும் நிவாரணப் பொருள்கள் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த யாழ் மக்களுக்குப் பெரும் ஏமாற்றம் தான்.

ஆம். யாழ்ப்பாண மக்களுக்கென நிவாரணப் பொருள்களை ஏற்றி வந்த 19 இயந்திரப் படகுகளும் திரும்பிச் சென்று விட்டன. இல்லை, இல்லை ஸ்ரீ லங்கா அரசாங்கம் திருப்பி அனுப்பிவிட்டது.

இந்தியப் படகுகளை திருப்பி அனுப்பியதால், ஏதோ பெரிய சாதனையைத் தான் நிலைநாட்டி விட்ட பெருமையில் ஸ்ரீலங்கா திளைத்திருக்கிறது. தனக்குப் பெரும் வெற்றி கிடைத்துவிட்டதாகவும் அது புளகாங்கிதம் அடைந்துவெற்றிக் களிப்பில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது.

யாழ்ப்பாண மக்களுக்கு உதவும் விடயத்தில் உண்மையில் யாருக்கு வெற்றி கிடைத்திருக்கிறது என்பதில் பலருக்கு மயக்க நிலை ஏற்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

சர்வதேச விதிகளுக்கு இணங்க செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் மூலம் நிவாரணப் பொருள்களை இலங்கைக்கு அறிவித்து விட்டுத் தான் மனிதாபிமான உதவியை வழங்க முயற்சித்தது இந்தியா.

ஆனல் வல்ல நாடு ஒன்றின் ஆதரவு தனக்கு உதவிக்கு உண்டு என்ற இறுமாப்பில் போலும், ஸ்ரீலங்கா, படகுகளைத் திருப்பி அனுப்பிவிட்டது.

இது இந்தியாவுக்குக் கிடைத்த பெரும் தோல்வி என்று பலரும் கருதுகிறார்கள். ஆனல் உண்மை அதுவல்ல. இந்தியா பெருமளவு சாதித்துவிட்டது என்றே கூறவேண்டும்.

யாழ்ப்பாண மக்கள் மீது ஸ்ரீலங்கா அரசாங்கம் தீவிர இராணுவத் தாக்குதல் நடத்துகிறது. அதனல் யாழ்ப்பாண மக்கள் பச்சைக் கொலை செய்யப்படுகிறார்கள். அரசின் அட்டூழியத்தால் இங்குள்ள மக்கள் பசியாலும், பிணியாலும் வாடுகிறார்கள். தொடர்ந்து மனித விரோதச் செயல்களைப் புரிந்து தாம் அதர்ம ஆட்சி செய்வது போதாது என்று மற்றவர் மனிதாபிமானத்தின் பேரால் செய்யும் உதவியைக் கூட ஸ்ரீலங்கா தடுக்கிறது என்பதை உலகத்துக்கு எடுத்துக் காட்டிவிட்டது இந்தியா.

சர்வதேசச் செய்தியாளர்களை அழைத்து வந்து, ஸ்ரீ லங்கா உதவிகளைத் தடுத்து வைத்தமைக்கு சாட்சி கூறச் செய்துவிட்டது இந்தியா.

இவையாவும் இந்தியாவின் சாதனைகள்! உண்மையான வெற்றியும் இந்தியாவுக்குத்தான்.

பிற்சேர்க்கை:

இக்கருத்தினை நாம் எழுதி முடித்த சொற்ப நேரத்தில் இந்திய விமானங்கள் குடாநாட்டின் பல இடங்களிலும் பரசூட் மூலம் உணவுப் பொருள்களை இறக்கியதாகச் செய்தி கிடைத்தது.

தான், வல்லவனுக்கு வல்லவன் என்பதை இந்தியா எடுத்துக் காட்டிவிட்டது.

இந்தியாவின் உதவி கண்டு யாழ்ப்பாண மக்கள் குதூகலிக்கிறார்கள், நன்றி தெரிவிக்கிறார்கள். இது ஒரு சரித்திரநிகழ்ச்சி ஆகும்.

நிவாரணப் பொருள் வழங்கியது குறித்து ஸ்ரீலங்கா அரசு கோபம் கொள்வது சந்திரனைப் பார்த்து நாய் குரைத்த கதை தான்!

# வடமராட்சி மக்கள் பட்டினியால் இறக்கும் நிலை

— வல்வைச் செய்தியாளர்:- சி. சுந்தரலிங்கம் —

வல்வெட்டித்துறை, ஜூன் 5

வடமராட்சி மக்கள் பசிக் கொடுமையால் இறக்கும் நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

அரசாங்க வானொலி, ரூபவாஹினி அறிவித்தல்களின்படி நிவாரண உதவி எதுவும் வடமராட்சி மக்களுக்குக் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பலர் பசியின் கொடுமையால் மாங்காய்,தேங்காய், கோவா இலை, வெண்டிக்காய், வாழைக்காய் போன்றவற்றை தோட்டங்களில் பிடுங்கி பச்சையாகவே சாப்பிடுகிறார்கள்.

அண்மையில் இராணுவக் கெடுபிடிகள் காரணமாக வீடுகள், காணிகளை விட்டு வெளியேறிய மக்கள் கோயில்கள், பாடசாலைகள் போன்ற இடங்களில் தஞ்சமடைந்த நிலையிலேயே பட்டினிச் சாவை எதிர்நோக்கி உள்ளனர்.

ஒரு தேங்காயின் விலை 14 ரூபா தொடக்கம் 16 ரூபா வரையும் ஒரு கொத்து அரிசி 25 ரூபா வரையும் விலை போகின்றது.

சில இடங்களில் இலைகுழைகளைக் கஞ்சியாகக் காய்ச்சி சிறுவர்களுக்குக் கொடுத்துவிட்டு பெற்றோர்கள் வெறும் தண்ணீரைக் குடிக்கிறார்கள்.

மேலும் வடமராட்சி பூவக்கரை பிள்ளையார் கோவிலில் பட்டினியால் 4 வயது குழந்தை ஒன்று நேற்று அதிகாலை இறந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-160)

## திடீரென..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரக சண்டை விமானங்கள் நான்கு கூட வந்தன.

போக்குவரத்து விமானங்கள் தாக்கப்பட்டால் பதில் நடவடிக்கை எடுப்பதற்காகவே மிராஜ் சண்டை விமானங்கள் அனுப்பப்பட்டன.

சுமார் நூறு நிமிட நேரத்தில்யாழ்குடாநாட்டின்பல பகுதிகளில் உணவுப்பொதிகளை பரசூட் மூலம் தரையிறக்கியபின்னர் இந்திய விமானங்கள் அனைத்தும் வெற்றியுடன் பெங்களூர் திரும்பின.

ஏழாலை, ஊரெழு, சுன்னாகம் (மயிலங்காடு), பொன்னலை, உரும்பராய், சாவகச்சேரி, இளவாலை உட்பட யாழ் குடாவின் பல பகுதிகளிலும் உணவுப் பொருள்கள் தரையிறங்கின.

வடமராட்சியின் பல பகுதிகளிலும் உணவுப் பொருள்கள் தரையிறக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இந்திய விமானங்கள் காரைநகர் கோவளம் கலங்கரை விளக்கம் ஊடாக கடல் மட்டத்தில் பறந்து வந்தன. பின்பு காரைநகர் கடற்படை முகாம் மேலாக இரண்டு விமானங்களும், மிகுதி விமானங்கள் காரைநகர் நடுப்பகுதியூடாகவும்யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றன.

இந்திய விமானங்கள் பொருள்களைத் தரையிறக்கியவேளையில் கூட வந்த 'மிராஜ்' யுத்த விமானங்கள் ஸ்ரீலங்கா அரசபடையின் முகாம்கள் இருந்த பகுதிகளுக்கு மேலாகப் பறந்து நோட்டம் விட்டன.

[அ-உ-எ-143-69-78]

## முடிவு - - - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் காரணமாக பட்டினி கிடக்கும் யாழ் மக்களுக்கு ஆகாய மார்க்கமாக உணவுப் பொருள்களை அனுப்பி உதவுவதைத் தவிர வேறு வழியில்லை என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து வெளியுறவு இணையமைச்சர் நட்வர்சிங் நேற்றுப் பிற்பகல் புதுடில்லியில் உள்ள இலங்கைத்தூதர் பெர்னாட் திலகரத்தினவைத் தனது அமைச்சுக்கு அழைத்தார்.

இந்திய அரசின் முடிவை அவருக்கு தெரிவித்த இணை அமைச்சர் நட்வர்சிங், மனிதாபிமான அடிப்படையிலான இந்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். (இ-எ)

## இந்தியா விளக்கம்

புதுடில்லி, ஜூன் 5

யாழ் குடாநாட்டுக்கு விமான மூலம் நிவாரணம் வழங்க எடுத்த முடிவு பற்றி புதுடில்லியில் உள்ள வெளிநாட்டுத் தூதர்களுக்கு இந்தியா முதலில் விளக்கமளித்தது.

இணை அமைச்சர் நட்வர் சிங், தூதர்களை தனித்தனியாக அழைத்து இந்த விளக்கத்தை அளித்தார். (உ-எ)

## இன்றைய. . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதைக் காட்டவே நிவாரண உதவிகளை அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது.

இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி மேலும் தெரிவித்தார். (இ-எ)

## சுதந்திரத....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்திருக்கிறது.

வெளிப்படையாகவே ஸ்ரீலங்காவின் சுதந்திரத்தை இந்தியா அப்பட்டமாக மீறியுள்ளது.

இதைத் தடுத்து நிறுத்தக் கூடிய இராணுவ ரீதியான வசதிகள் ஸ்ரீலங்காவிடம் இல்லை.

ஸ்ரீலங்காவின் தன்னதிக்கத்தைப் பாதிக்கும் இந்த நடவடிக்கைகளுக்கு இந்தியாவே பொறுப்பு ஏற்க வேண்டும்- என்றும் கண்டன அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ-எ)

## பயந்து....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஓட்டம் பிடித்தனர்.

ஆனல் சற்று நேரம் கழித்து உண்மை தெரிய வந்தபோது பரசூட்டுகள் தரையிறங்கிய இடங்களை நோக்கி மக்கள் முண்டியடித்துச் சென்றனர். (உ)

## ஷெயில் சிங் ராஜீவ் சந்திப்பு

புதுடில்லி, ஜூன் 5

நேற்று பிரதமர் ராஜீவ் காந்தி, ஜனதிபதி ஷெயில் சிங்கை சந்தித்துப் பேசினர்.

சந்திப்பு ஒரு மணித்தியாலம்வரை நீடித்தது. (இ-எ)

## இந்தியா தனது நிலைமையை தெளிவுபடுத்தும்

புதுடில்லி, ஜூன் 5

விமானமூலம் யாழ்ப்பாணக் குடா நாட்டில் உணவுப் பொருள்கள் போடப்பட்டது குறித்து ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் சகல நாடுகளின் தூதர்களுக்கும் எடுத்து விளக்க இந்தியா நடவடிக்கை எடுத்துள்ளது.

ஐ. நா. சபையில் உள்ள இந்திய நிரந்தரப் பிரதிநிதிக்கு நேற்று இந்திய வெளிநாட்டு அமைச்சு இது தொடர்பாக உத்தரவிட்டுள்ளது.

ஆகாய மார்க்கமாக உணவுப் பொருள்களை விநியோகிக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதை இந்தியப் பிரதிநிதி ஏனையநாட்டுத் தூதர்களுக்கு விளக்கி வருகிறார் என்று அறிவிக்கப்படுகிறது. (இ-எ)

## சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் என்று ஐ.நாவில் முறையீடு

கொழும்பு, ஜூன் 5

நாட்டின் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகஇலங்கை வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீது ஐ. நா. பொதுச் செயலாளரிடம் முறையிட்டிருக்கிறார்.

பாதுகாப்பு சபைஉறுப்பினர்களுக்கு இது பற்றி தெரிவிக்கும்படியும் அமைச்சர் சாகுல் ஹமீது தெரிவித்து இருக்கிறார்.

தேவை ஏற்படும் போது இது பற்றி நேரில் வந்து பிரஸ்தாபிப்பேன் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## இந்தியா ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யைத் தெரிவிக்கிறது.

இலங்கையின் இச்செயல், தமிழர்களின் மனித உரிமைகளைத் தொடர்ந்தும் மறுக்க இலங்கை அரசு திடசங்கற்பம் கொண்டிருப்பதை எடுத்துக் காட்டுகின்றது.

இராணுவ நடவடிக்கை காரணமாக இலங்கைத் தமிழர் துன்பம் குறித்து இனியும் அமைதியான பார்வையாளராக இந்தியா வெறுமனே பார்த்துக்கொண்டிராது.

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

## பொருள்கள் இன்னும் படகில்

சென்னை, ஜூன் 5

புதன்கிழமை கச்சதீவு வரை வந்து சென்ற 19 இந்தியப் படகுகளில் உள்ள உணவுப் பொருள்களும் நேற்றுமாலை வரை இறக்கப்படவில்லை என்று அறிவிக்கப்படுகின்றது.

இராமேஸ்வரம் கரையில் படகுகள் அனைத்தும் நங்கூரமிட்டுள்ளன. (உ-எ)

## ரூ. 1 லட்சம்

சென்னை, ஜூன் 4

தமிழ் நாடு கூட்டுறவு தொழிலாளர் கழகம் பிரதமர் காந்தியின் இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்கு ஒரு லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது. (இ-எ)

## ராஜீவ்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தான் பிரதமர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார் என்று கூற முடியாது.

இனப்பிரச்சினையில் மத்தியஸ்தம் செய்து விரக்தி நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டிருக்கிறது.- இப்படி மார்க் ரலி தெரிவித்திருக்கிறார். (உ-எ)

## அரசின் உணவு-----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கங்களும் உணவுப் பொருள்கள் இன்றி வெறிச்சோடிக் கிடக்கின்றன.

உணவுக் களஞ்சியத்தில் உள்ள அந்த உணவுப் பொருள்களும் இராணுவத்தின் பாதுகாப்பில் இருப்பதனல் அவற்றையும் எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

உணவுக் களஞ்சியத்தில் உள்ள அரிசி, மா ஆகியவற்றை எடுத்து விநியோகித்தால் கூட குடாநாடு இருக்கும் இன்றைய நிலைமையில் அந்த உணவுப் பொருள்கள் சுமார் 15 நாட்களுக்கும் போதாமல் இருக்கும்.

**தனியார் வர்த்தகம்**

இதே வேளையில் யாழ் குடாநாட்டிற்கு தனியார் வர்த்தகர்களால் எடுத்து வரப்படும் ஸ்ரீலகா அரசினல் வழங்கப்படாத அத்தியாவசிய உணவுப் பொருள்கள் ஒரு வார காலத்திற்குக் கூட போதுமானதாக இல்லை. முன்னர் தினமும் சுமார் 75 லொறிகளில் பொருள்கள் குடாநாட்டுக்கு வந்தன.

இப்பொழுது ஊரடங்குச் சட்டம் அமுலில் இல்லாத வேளையில் இரண்டு அல்லது மூன்று லொறிகள் மட்டுமே வருகின்றன.

இவற்றைக் கொண்டு எந்த வகையிலும் நாம் குடாநாட்டிற்கான அத்தியாவசிய உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது.

இவ்வாறு பிரபல வர்த்தகர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார். (அ-7)

## பெங்களூருக்கு.. . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராமேஸ்வரம் மீண்டும் திரும்பினர்.

பின்னர் மதுரையில் இருந்து புதுடில்லிக்கு விசேஷ விமானம் மூலம் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது விமானத்தை பெங்களூருக்கு திரும்பும்படி புதுடில்லியில் இருந்து உத்தரவு கிடைத்தது.

அதைத் தொடர்ந்து விமானம் பெங்களூரில் உள்ள விமானப் படையின் விமானத் தளத்தை அடைந்தது.

அங்கிருந்து யாழ் நோக்கி புறப்பட்ட விமானங்களில் 35 செய்தியாளர்கள் ஏற்றி அனுப்பி வைக்கப்பட்டனர். (இ-எ)

இப் பத்திரிகை நியூ உதயன் ஸ்பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 05-06-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Friday June 05, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QD/...

## நீத்தார் பட்டியல்

**திருமதி இராசரெட்ணம் பரமலிங்கம்**
(ஓய்வுபெற்ற பிரதம தாதி யாழ் வைத்தியசாலை)

இவர் பரமலிங்கத்தின் (கொக்குவில் கிராமசபை முன்னாள் உப தலைவர்) அன்பு மனைவியும், திருமதி தி. மகாதேவன் (அரசினர் வைத்தியசாலை ஊறணி, வல்வெட்டித் துறை) கலைமகள் வசந்தகுமார் (பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்,வண்ணார்பண்ணை) ஜெயந்திமாலா, கதிர், (பிரான்ஸ்), ஸ்ரீதரன் (பிரான்ஸ்), வன்னியசேகரன் (இங்கிலாந்து) சத்தியகுமார் (பல் மருத்துவ பீடம் - பேராதனை), கலையரசி, ஜெயக்குமார் (வணிக பீடம் - யாழ் பல்கலைக் கழகம்), உதயகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் மகாதேவன் தவவினயகம், சிவலிங்கம் (ராஜா கிறீம் கவுஸ்), இந்திராவதி (குப்பிளான்), லலிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், புஸ்பவதி (அரசினர் வைத்தியசாலை சாவகச்சேரி) புஸ்பராசா (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும் நடராசாவின் மைத்துனியுமாவார். அன்னரினது ஈமைக்கிரியை நாளை சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு புதுவீதி, வண் வடமேற்கு-ஆனைக்கோட்டை இல்லத்தில் நடைபெற்று இறுதிக் கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். (1413)

## 5ஆவது நினைவஞ்சலி



**வி. கே. நடராசா**
**(வயாவிளான்)**

தோற்றம்: 20 - 10 - 31 மறைவு: 30 - 05 - 82

திதி: 05 . 06 . 87

பலரின் அன்புக்குரியவராய் பண்பிற்கோர் இலக்கணமாய், பலர் போற்ற வாழ்ந்து. பாசத்துடன் எம்மை வழிநடத்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் ...

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(1348)

சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

சகலவிதமான இந்திய வார, மாதசஞ்சிகைகள், நாவல்கள், கதைப்புத்தகங்கள் யாவும் பெறலாம். பழைய, புதிய வாடிக்கையாளர்கள் அனைவரும் உடனடியாக தொடர்புகொள்ளுங்கள் ராஜன் புத்தகசாலையின் தற்காலிக நிலையம் ''ராஜன் அகம்'' பிள்ளையார் வீதி, திருநெல்வேலி. பஸ் ரூட், 764, பலாலி வீதி, (தபால் பெட்டியடி) (1409)

## இடம் மாற்றம்

தற்போதைய நெருக்கடி நிலைமை காரணமாக மக்கள் பாதுகாப்பை முன்னிட்டு எமது ஸ்தாபனம் கீழ்வரும் முகவரிக்கு தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளது.

**த. குமாரசாமி**
**ரெக்ஸ்ரைஸ்ஸ்**
இல, 272 (352), நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(2850)

# பிரயாண ஒழுங்குகள்

## குவைத்

மேற்படி பிரயாண ஒழுங்கு சம்பந்தமான நேர்முகப் பரீட்சைகள் யாவும் நாட்டின் போக்குவரத்துச் சீரின்மை காரணமாக யாபேருக்கும் யாழ்ப்பாணத்தில் நடக்க இருப்பதால் 02-06-1987 முதல் 15.06-1987 வரை கீழ்க்குறிப்பிடும் ஆவணங்களுடன் சமுகம் கொடுக்கவும்.

(1) புகைப்படம் ஒன்று
(2) தகைமைச் சான்றிதழ்
(3) வெளிநாட்டில் வேலை செய்தவராயின் கம்பனி வழங்கிய சான்றிதழ்
(4) தொழில் நுட்ப சான்றிதழ்
(5) சாரதிமார் I. சர்வதேச வாகன அனுமதிப்பத்திரம் (International Driving Licenc )
II. உள்ளூர் வாகன அனுமதிப்பத்திரம்
இவற்றிற்கான போட்டோ பிரதிகளுடன் வரவும்.

கீழ்க்குறிப்பிட்ட பதவிகளுக்கு மட்டும் சொற்ப இடமிருப்பதால் புதிதாகச் சேர விரும்புவோர் பாஸ்போட் சகிதம் மேற்குறிப்பிட்ட ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்.

| | |
|---|---|
| LABOURER | — 36 KD |
| CARPENTER | — 45 KD. |
| STEEL WORKER | — 42 KD. |
| MASON | — 42 KD. |
| HEAVY EQUIPMENT OPERATOR | — 60 KD. |
| HEAVY DUTY DRIVER | — 54 KD. |
| MECHANICS | |
| PLUMBER | — 48 KD. |
| ELECTRICIAN | — 48 KD. |
| SECURITY GUARDS | — 45 KD. |

இலவச சாப்பாடு — இலவச தங்குமிட வசதி

## ★ சவூதி அரேபியாவுக்கு டாக்டர்கள் உடன் வேலைவாய்ப்பு

நேர்முகப் பரீட்சை — Hotel Inter Continental
சம்பளம் — பேசித் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

அமெரிக்கன் முன்னணிக் கம்பனி

**Construction & Development Company Ltd.**
37, S. DE. S. JEYASINGHE MAWATHA
NUGEGODA.

குடாநாட்டின் ஏகப்பிரதிநிதி;
V.P. பாலா - (V. P. பாலசுப்பிரமணியம்)
C/o. N. V. பொன்னுத்துரை,
பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org